


புதிய ஆட்சி எப்படியிருக்கும் என்று முதலாளிததுவ பத்திரிக்கை 'இந்து' வெளியிட்டுள்ள கருத்துப்படம்.

குள்ளே குழுச் சண்டைகள் தோன்றி மீளமுடியாத அரசியல் நெருக்கடிக்குள் அவை சிக்கிக் கொள்கின்றன. இப்படிப்பட்ட 'ஜனநாயக'த்தைத தான் தனது பிரிட்டிஷ் எஜமானர்களிடமிருநது காந்தியவாதிகள் வரித்துக் கொண்டுள்ளார் கள்.

'தொங்கு நிலை நாடாளுமன்றம்' என்று முதலாளித்துவ அரசியல்வாதிகள் நாசூக்காகக் கூறும் நிலைதான் நாடாளுமன்ற அராஜகத்தை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக பதவிவெறி, கட்சி மாறுவது, பேரங்கள் - வியாபாரங்கள் நடத்தி ஆட்சி அமைப்பது, பிறகு கவிழ்ப்பது ஆகிய அனைத்து அரசியல் அசிங்கங்களும் நடக்கிறது. குறிப்பாக பல்வேறு ஏகாதிபத்தியங்களை ஆத ரிக்கும் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்கள் என்றும் பல்வேறு தேசிய இன, மத, சாதியி னர் என்றும் பிளவுகள், பிரி வுகள், முரண்பாடுகள் நிலவும் இந்தியா போன்ற நாடுகளில் அரசியல் பொறுக்கித்த னம், கிரிமினல் குற்றமாகி நாடாளுமன்ற அரா ஜகம் உக்கிரமாகவே நடக்கும். இங்கே இவ்வ ளவு காலம் தாக்குப் பிடித்து நின்றதற்குக் கார ணமே காங்கிரசு, நேரு பரம்பரை யின் மீது உரு வாக்கப்பட்ட பிரமைதான். அதை எதிர்த்து நிற் கும் வலுவான சக்திகள் தலைதூக் கிய போதெல்லாம் நாடாளுமன்ற அராஜகம் நடப்பதைப் பார்க்கிறோம்.

தொங்குநிலையானாலும், தெளிவான - தொங்கா நிலையானாலும் எந்தக் கட்சியோ, கூட் டணியோ, ஆட்சி அமைத்தாலும் முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக மூடுதிரையின் பின்னே அதிகார வர்க்க, போலீசு, இராணுவம் என்ற அரசு இயந்திரம் இருந்துகொண்டு நிரந்தர மாக நிர்வாகத்தை நடத்துகிறது. அதைக் கொண்டு ஆளும் வர்க்கங்கள் தமது அடக்கு முறை, சுரண்டலை நடத்தி வருகின்றன. இந்த அரசியல் -பொருளாதார ஏற்பாடு தொடர்வதற்குத் தடையாகிவி டும் அளவு நாடாளுமன்ற அராஜகம் முற்றும்போது பாசிச / இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவவும் அவர்கள் தயங்கமாட்டார்கள். இது முதலாளித்துவ ஜனநாயக அரசியலின் தர்க்க ரீதியான, தவிர்க்க முடியாத அங்கமாகவே உள்ளது. ஆகவே தொங்கு நிலையில் இருப்பது நாடாளுமன்றம் மட்டுமல்ல, முதலாளித்துவ ஜனநாயக அரசியல் அமைப்பு முழுவதுமேதான்!

நிலையான ஆட்சி என்ற பெருங்கூச்சலைக் கிளப்பி, பயபீதியூட்டி அரசியல் ஆதாயம் தேடவே பாசிச ராஜீவ் கும்பல் முயன்றது. எங்களாலும் அதைச் சாதிக்க முடியும் என்கிற தோர ணையில்தான் மற்ற பிற ஓட்டுக் கட்சிகளும் நிரூபிக்க முயலுகின்றன. யாருக்கு வேண்டும் நிலை யான ஆட்சி? நமது நாட்டு மக்களுடைய வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவதற்கோ, அல் லது இன்றைய நிலைமையாவது சரிந்து விடாமல் தடுப்பதற்கோ எந்தவொரு ஓட்டுக் கட்சியின் நிலையான ஆட்சியாவது பயன்படுமா? தற்போதைய அரசியல் பொருளாதார அமைப்பு நீடிக்கும் வரை நிலையான ஆட்சி என்பது உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காக ஆளும் வர்க்கங்களுக்குத் தான் பயன்படும்.

ஆகவே நிலையான ஆட்சி அமைய வேண்டும் என்பதில் உழைக்கும் மக்களுக்கு எவ்வித அக்கறையும் தேவையில்லை. இந்த அரசியல் பொருளாதார அமைப்புக்குள்ளாகவே தீர்வுக ளைத் தேடி முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. அதற்குள்ளாகவே முடங்கிக் கொண்டு, சிறைகிடக்க வேண்டிய அவசிய மில்லை. அடுத்தடுத்த தேர்தல்களில் மக்களை ஏய்த்து ஆட்சிக்குப் போய், மக்களையே கொள் ளையடிக்கும் ஓட்டுண்ணி, இடைத்தரகர் கூட்டமான ஓட்டுக் கட்சிகளையும் அவற்றுக்குப் பின்னி ருந்து இயங்கும் ஆளும் அதிகார வர்க்கக் கூட்டத்தையும் ஒழித்துக்கட்ட வேண்டும். தமக்குப் பயன்படாத, தமக்கு எதிரான இந்த அரசியல், பொருளாதார அமைப்பையே தூக்கியெறிந்து விட்டு தமக்கு அவசியமான மாற்று அமைப்பை நிறுவிக் கொள்ள வேண்டும். கிராமங்கள் மற் றும் தொழிற்சாலைகள் மட்டத்திலிருந்து உழைக்கும் மக்களே நேரடி நிர்வாகம் செலுத்தும் ஒரு புதிய ஜனநாயக அமைப்பு முறைதான் தேசிய ஒருமைப்பாடு முன்னேற்றத்துடன் கூடிய நிலையான ஆட்சியாக அமையும். ■

# ஈழத் அழிவு

ஈழ துரோகிகளின் இறுதிக்காலம் வந்துவிட்டது. ஒன்று அவர்கள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தோடு சேர்ந்து மூட்டைக் கட்டிக் கொண்டு வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடிவிட வேண்டும். அல்லது ஈழ மண்ணிலேயே பூண்டோடு அழித்தொழிக்கப்படுவார்கள். ஈழ துரோகிகளின் எஜமானர்களான பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சி இந்தியப் பொதுத் தேர்தல்களில் தூக்கி எறியப் பட்டு விட்டது. இது அவர்களின் வீழ்ச்சியை விரைவுபடுத்தி விட்டது.

ஈழத்தின் எட்டப்பர்களுக்கு ஏற்படும் இந்த இறுதி முடிவு குறித்து ஈழ மக்கள் எவரும் வருந்தப் போவதில்லை. ஏனெனில் அந்நிய, ஆதிக்க, ஆக்கிரமிப்புப் படைக்கு தாயகத்தைக் காட்டிக் கொடுத்து சொந்த சகோதரர்களை படுகொலை செய்யவும், சொந்தச் சகோதரிகளையே கற்பழிக்கவும் துணை போனவர்கள். ஆக்கிரமிப்புப் படையினர் வெளியேற வேண்டிய நிர்பந்தம் எழுந்தபோதும் அதை எதிர்த்ததோடு, ஈழத்தையே இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் நோக்கத்தோடு தேசத்துரோகக் கொலைகாரப் படையெழுப்பினார்கள்.

இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறுவதாக கெடுவைத்து பிரேமதாசா கும்பலுடன் ஒப்பந்தம் போட்டபோது கூட எழுதினோம்: இதை நம்பக்கூடாது; ஏதாவது ஒரு முகாந்திரத்தை முன்வைத்து இந்திய இராணுவம் தங்கியிருக்கவே முயலுகிறது; இந்தியாவின் முன்னாள் இராணுவத்தினரை ஆள் சேர்த்து இரகசியப்படை திரட்டுகிறது; இந்திய ஆலோசகர்கள் என்கிற பெயரில் அவர்களை ஈழத்துக்கு அனுப்பி ஈழ துரோகிகளின் ஆணையில் இயங்கும் இரகசியக் கொலைப்படை ஒன்றைத் திரட்டுகிறது. (அக். 1-15 '89 புதிய ஜனநாயகம்)

பிறகு இதை உறுதிப்படுத்தும் வகையில் "தமிழ் தேசிய இராணுவம்' என்ற இராணுவத்தை இந்திய ஆக்கிரமிப்புப் படையின் பயிற்சி, ஆயுதங்களைக் கொண்டு ஈழத் துரோகிகள் உருவாக்கி வருகிறார்கள். அதற்காக ஈழச் சிறுவர் - சிறுமிகளைப் பலாத்காரமாகக் கடத்திக் கொண்டு போகிறார்கள்" என்று புலிகள் குற்றஞ்சாட்டினர். பலநாட்டுப் பத்திரிக்கையாளர்களும் இதை உறுதி செய்தனர். தமிழ் தேசிய இராணுவத்தில் சேரும்படி ஈரோஸ் அமைப்பினரை மிரட்டுவதாக அவர்கள் புகார் கூறினர். இதையெல்லாம் மறுத்து "அப்படி ஒரு இராணுவமே கிடையாது; இருப்பதெல்லாம் சட்டப்பூர்வமாக இயங்கும் குடிமக்கள் தொண்டர்படைதான்; அதனிடமிருப்பது இலங்கை அரசு கொடுத்த சாதாரண துப்பாக்கிகள் தாம் என்று . துரோகிகளின் அதிகாரப்பூர்வத் தலைவர் வரதராஜப் பெருமாள் புளுகினார்.

கடந்த மாதம் அம்பாறை மாவட்டத்தை விட்டு இந்திய இராணுவம் வெளியேறியது. அங்கே அக்கறைப்பட்டு பகுதி

# துரோகிகளின்
# நெருங்குகிறது!

யில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். மற்றும் டெலோவுக்குச் சொந்தமான இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர். 60க்கும் மேற்பட்ட துரோக இராணுவத்தினரைக் கொன்று, 140 பேரை சிறைப் பிடித்ததோடு, எட்டு லாரி நிறைய ஆயுதங்களைப் பறித்தெடுத்தனர். அப்போதும் தமிழ் தேசிய இராணுவம் என்பதே கிடையாது; தாக்கப்பட்டது குடிமக்கள் தொண்டர் படைதான் என்று வரதராஜப் பெருமாள் சாதித்தார்.


அதன்பிறகு அம்பாறை மாவட்டத்தில் யாருடைய ஆதிக்கத்தை நிறுவுவது என்பதற்கான மோதல் ஏற்பட்டது. அக்கறைப் பட்டு மற்றும் கல்முனையில் நிறுவப்பட்ட இலங்கை இராணுவ போலீசு அதிரடிப்படை முகாம்களை தமிழ் தேசிய இராணுவம் நவீன ஆயுதங்களைக் கொண்டு தாக்கி 75 பேரைப் பலி கொடுத்து 250 பேரைக் கொன்றது. இந்திய இராணுவம் வெளியேறும் முன்பு சட்ட விரோத, இரகசிய இராணுவத்தை உருவாக்கி பயிற்சியும் நவீன ஆயுதங்களும் வழங்கியதாக இலங்கை அரசு புகார் கூறியது. அப்போதும் அதை அடியோடு மறுத்தனர் இந்திய அரசும், ஈழத் துரோகிகளும். ஆனால் மேற்கண்ட சம்பவங்களை அறிவித்த இந்தியப் பத்திரிக்கைகள் இந்தியாவின் நாசகார சதிவேலைகளைப் பற்றிப் பெருமையோடு எழுதி வருகின்றன.


இந்தியாவின் இலங்கை ஆக்கிரமிப்புக் கொள்கைகளை முழுமூச்சாக ஆதரிப்பது 'இந்து' நாளேடு. அதன் மாதமிருமுறை ஏடான 'ஃபிரண்ட் லைன்' (நவ. 11-24) பின்வருமாறு எழுதுகிறது. ''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கும் இறுதிக் கட்டமாக வடகிழக்கு மாகாண அரசைப் பாதுகாப்பதை உறுதி செய்வது இந்தியாவின் முக்கியக் கொள்கையாக இருந்தது. இதற்காக பெருமளவு கட்டாய ஆள் சேர்ப்பு மூலம் குடிமக்கள் தொண்டர் படை மற்றும் தமிழ் தேசிய தொண்டர் படை ஆகியவற்றை உருவாக்கியது. இவற்றிலே குடிமக்கள் தொண்டர்படை போலீசைப் போல உடையணிந்தது; சட்டபூர்வமானது; இந்திய அமைதிப்படை வெளிப்படையான பயிற்சியளித்தது. ஆனால் தமிழ் தேசியத் தொண்டர் படை இரகசியமானது; இந்திய அமைதிப்படைக்கு பதிலாக.'இந்திய ஆலோசகர்களால் பயிற்சியளிக்கப்படும் சட்ட விரோதமானது; மிகவும் அபாயகரமான தாக்குதல் சக்தியுடையது; ஒளிந்து வாழும் இராணுவ உடுப்புகளும், ஏ.கே.47, ஏவுகணைகள் போன்ற அதிநவீன ஆயுதங்களை ஏந்தியிருப்பது. ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.என்.டி.எல்.எஃப்., டெலோ ஆகிய மூன்று புலிகள் எதிர்ப்பு அமைப்புகளின் கூட்டுத் தலைமையில் இயங்குகிறது. இவ்விரு படைகளுமே இந்திய இராணுவத்தைப் போலவே அணிவகுப்பு மரியாதை செலுத்தி இந்தி மொழி ஆணைகளுக்குப் பழக்கப்பட்டவர்கள். அம்பாறையில் இருந்து இந்தியாவின் மலை பிராந்தியப் படை விலகிய பிறகு இவ்விரு படைகளும்தான் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன''

இப்படி அவர்களின் ஊதுகுழல்களே ஒப்புக் கொண்டுள்ளபோதும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களும் அவர்களின் எடுபிடிகளும் ''தமிழ் தேசிய இராணுவம் என்று எதையும் உருவாக்கி, பயிற்சியும் ஆயுதமும் தரவில்லை'' என்று அடியோடு புளுகுகின்றனர். ஆனால் இந்தப் புளுகெல்லாம் அவர்களின் வீழ்ச்சியைத் தடுத்துவிட முடியாது. ஈழத் தமிழரின் எதிரியான இலங்கை இராணுவத்துடன் கூட்டுச் சேர்ந்து புலிகள் தம்மைத் தாக்குவதாகக் கூறி அவர்களின் ஆதரவைத் திரட்டிக் கொண்டுத் தாக்குப் பிடித்து விட முடியும் என்று ஈழத் துரோகக் குழுக்கள் நம்புகின்றன.

இனப் படுகொலைப் போர் தொடுத்து பல ஆயிரம் ஈழத் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் அதை விடக் கொடிய ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து மேலும் பல ஆயிரம் ஈழத் தமிழர்களை இந்திய இராணுவம் கொன்றது. இந்திய - இலங்கை பாசிச கும்பல்களுடன் கூட்டுச் சேர்ந்து அதற்குத் துணை போனவர்கள்தான் இந்த ஈழத் துரோகக் குழுவினர். பிறகு இவ்விரு ஆளும் கும்பல்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றி, இரண்டு எதிரிகளை எதிர்த்து ஒரே நேரத்தில் போரிட முடியாத போது மிகவும் அபாயகரமான, உடனடி, அந்நிய எதிரிக்கு எதிராக உள்நாட்டு எதிரியுடன் தற்காலிகக் கூட்டு ஏற்படுவது தவிர்க்க முடியாதது; அவசியமானது. இதை ஈழத் தமிழர்கள் நன்கறிவர். அந்நிய எதிரியோடு துரோகிகளையும் ஒழித்துக் கட்டுவதற்காகப் போரிடுவர் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், கடந்த காலங்களில் செய்ததைப் போல தமது குழுவின் தனிப்பட்ட நலன்களுக்காக பேரங்கள் பேசி இலங்கையின் ஆளும் பிரேமதாசா கும்பலிடம் புலிகள் சமரசம் செய்து கொண்டு ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அடகு வைப்பார்களானால், மற்ற பிற ஜனநாயகப் போராளி குழுக்களை தடை செய்து ஒழித்துக் கட்ட புலிகள் முயல்வார்களானால் என்ன செய்வது? புலிகளுக்கும் எதிராகவே திரும்பி போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர ஈழத் தமிழர்களுக்கு வேறு வழியில்லை. ●





**ஜோதிப்பிரகாசம்!**

**இந்திய மக்கள் முன்னணிக்குள் புகுந்து
ஒரு புரட்சிகர அமைப்பை சீரழித்தன ஏகாதி
பத்திய உளவு நிறுவனங்களான தன்னார்
வக் குழுக்கள். ஈழப் போராளி அமைப்புக
ளுக்குள் புகுந்து பிளவுபடுத்தி, மோதவிட்டு
ரத்தம் குடித்தது இந்திய உளவுப்படை 'ரா'.
அதே நோக்கங்களுக்காக டிராட்ஸ்கியவாதி
களாலும் 'ரா'வாலும் உருவாக்கப்பட்டுள்
ளது, ஜோதிப்பிரகாசம் தலைமையிலான
ஒரு தமிழ் தேசிய இன விடுதலை அமைப்பு.**

சியல் பொருளாதார, சமூகக் கருத்தோட்டங்
கள் எல்லாம் எப்படிப்பட்டவை என்பதை
ஒதுக்கிவிட்டு அவனுடைய இராணுவச் சாத
னைகளை மட்டும் வைத்து எடைபோடுவது
துப்பாக்கியை ஆணையில் வைப்பதாகும்.

பிரபாகரனின் அருமை பெருமைகள்
என்று அவரைத் துதிபாடுபவர்கள் அடுக்கு
பவைகள் கூட ஒரு இராணுவத்தின் தளபதிக்
குரிய திறமைகள் மட்டுமே; ஒரு தேசத்தின்,
மக்களின் தலைவனுக்குரிய தகுதிகள் என்று
கூறிவிட முடியாது. உலகின் பல நாடுகளி
லம் அரசியல் தலைமையைத் தூக்கி எறிந்து
விட்டு இராணுவத் தளபதிகள் ஆட்சியைக்
கைப்பற்றிக் கொண்டு காட்டுமிராண்டித்தன
மான ஆட்சி நடத்துவதைப் பார்க்கிறோம்.

மாபெரும் அரசியல் தலைவர்களாக
வும், மிகச் சிறந்த இராணுவத் தளபதிகளாக
வும் இருந்த மாவோ, ஸ்டாலினைக்கூட பிர
பாகரனோடு ஒப்பிட்டு அவரது துதிபாடிகள்
பேசக்கூடும். அப்படி செய்தால் அது இவர்க
ளுடைய அறியாமையைத் தான் குறிக்கும்.
யதார்த்தத்துக்குப் பொருந்தாத கற்பனா
வகை தேசிய சோசலிசம் (உண்மையில் முத
லாளிகள் - நிலப்பிரபுக்களுடன் கூட்டு)
தேசிய இனவெறி, தனிநபர் வழிபாடு
ஆகிய கொள்கைகளை உடைய பிரபாகரன்
இன்னொரு பாசிச சர்வாதிகாரியாவதற்
கான அடிப்படைதான் இருக்கிறது; இன்
னொரு சோசலிசத் தலைவராவதற்கான
அடிப்படை கிடையாது.

அரசியலைப் பின்னுக்குத் தள்ளி
விட்டுத் துப்பாக்கியை ஆணையில் வைப்ப
தன் விளைவுகள் - விபரீதங்கள் எப்படி
இருக்கும் என்பதை இப்போதே பிரபாகரன்
செய்து காட்டுகிறார். எந்தவொரு கருத்து
மாறுபாட்டையும் துப்பாக்கி முனையில்
தான் தீர்ப்பதுதான் முடிவாகும். இவ்வளவு
காலமும் புலிகளுடன் ஒப்பந்தம் போட்டுக்
கொண்டு இயங்கிய முஸ்லீம் அமைப்பின
ரோடு வேறுபாடுகள் தோன்றியதும்
கொலைகள் செய்வது; கடத்திக் கொண்டு
போய் துப்பாக்கி முனையில் பணிய வைப்
பது என்ற தமது வழக்கமான முறைக்குத்
தாவி விட்டார்கள் புலிகள்.

மாற்று இனத்தவரிடம் மட்டுமல்ல,
மாற்று அமைப்புகளிடம் மட்டுமல்ல, தன்
இனத்தாரிடையே, தன் அமைப்புக்குள்
ளேயே கூட இந்தத் துப்பாக்கித் துரைத்தனம்
நீளும். ஏற்கனவே மற்ற பிற ஜனநாயக
அமைப்புகளை ஈழத்தில் செயல்படக்
கூடாது என்று தடை விதித்திருப்பது; சமூக
விரோதிகள், துரோகிகளைத் தண்டிப்பது
என்கிற பெயரில் இரகசியக் கொலைகள்
செய்வது ஆகியவை இதையே எச்சரிக்கின்
றன.

இதற்காகவா ஈழத் தமிழர்கள் இவ்வ
ளவு இரத்தம் சிந்தினார்கள். மாற்றானது
இன ஒடுக்கு முறையை விட, தன்னினத்தா
னின் பாசிச சர்வாதிகாரம் பரவாயில்லை
என்று சகித்துக் கொள்ள முடியுமா? இந்தக்
கேள்வி ஈழத்தமிழரின் நெஞ்சிலே எழுந்து
நிற்கிறது. பிரபாகரன் மீது உருவாக்கி வளர்க்
கப்படும் தனிநபர் மோகம், தனிநபர் வழி
பாடு, அவற்றின் விளைவுகள் - விபரீதங்கள்
குறித்து ஈழத் தமிழர்கள் மட்டும்ல்ல, இந்தி
யத் தமிழர்களையும் நாம் எச்சரிக்கிறோம்.
ஏனெனில் பிரபாகரனின் துப்பாக்கித்
துரைத்தனம் ஈழத்தோடு நிற்காது. இந்தியா
விலுள்ள தமிழ் நாட்டுக்கும் அவர் அதை
விரிவுபடுத்துவார் அதற்கான அடிப்படை
கள் இங்கேயும் உள்ளன.

வடகிழக்கு இந்தியாவிலும், வடக்கே
காஷ்மீரிலும் நடக்கும் தேசிய இனப்
போராட்டங்களை பகிரங்கமாக ஆதரிப்ப
தில் மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்
கள் தாம் முன்னோடிகளாக விளங்குகின்ற
னர். இங்கே தமிழகத்திலும் சுயநிர்ணய உரி
மைக்கான கோரிக்கையை ஆதரிப்பதில்
எவருக்கும் நாம் பின்தங்கியவர்களாக
இல்லை.

ஈழ விடுதலைப் போரின் விளைவாக
இந்தியாவிலும் 'தனித்தமிழ் நாடு கோரிக்
கை'யைப் முன் வைத்துப் பல குழுக்கள்
தோன்றியுள்ளன. அவற்றிலே சில குழுக்கள்
ஆயுதப் போராட்டப் பாதையை தெரிவு
செய்து கொண்டுள்ளதாக அறிவிக்கின்றன.
அதே சமயம் அவை திராவிட இயக்கங்கள்,
மற்றும் இனவாத, பிழைப்புவாத சக்திகளு
டன் சந்தர்ப்பவாதக் கூட்டுகள் வைத்துக்
கொண்டுள்ளன. சுயநிர்ணய உரிமைக்
கோரிக்கையை அடைவதற்கான பாதை
யாக மக்கள் திரள் ஆயுதப் போராட்டத்தை
அவை மேற்கொள்ளவில்லை. தனிநபர்
பயங்கரவாதப் பாதையைத் தேர்ந்தெடுத்
துக் கொண்டுள்ளன. இதற்காக சீரழிந்து
போன ஈழப் போராளிகள் மற்றும் விடுத
லைப் புலிகளது ஆதரவைப் பயன்படுத்திக்
கொள்வது தவறில்லை என்று அந்த பயங்கர
வாதக் குழுக்கள் கருதுகின்றன. இப்படிப்பட்
டதொரு கூட்டு தமிழ்தேசிய இனவெறியர்க
ளாகவும், பாசிஸ்டுகளாகவும் அந்தக் குழுக்
களை சீரழித்துவிடுவது தவிர்க்க முடியாது.

'அகில இந்திய தேசிய' வெறியையும்
மதவெறியையும் பரப்புவதற்காக இங்கே
ஒரு பார்ப்பனக் கூலிப் பிரச்சாரக் கும்பல்
உருவாகி இருப்பதைப்போல பிற்போக்
தமிழ்தேசிய இனவாதத்தையும் பிரபாகர
வழிபாட்டையும் பரப்புவதற்காக இங்
ஒரு 'திராவிட - தமிழ்' தேசியக் கூலிப் பிர
சாரக் கும்பலும் தோன்றியிருக்கிறது. இ
ஏன் பிற்போக்கு தமிழ்தேசிய இனவாத
என்கிறோம்?

• ''உலகம் முழுவதும் வாழும் ஆறுகே
டித் தமிழர்களும் ஒரே இனம். இந்தியாவி
உள்ளது தாய்த் தமிழகம். பிரபாகரன் உலக
தமிழினத்தின் தளபதி!'' என்ற கருத்தை வீ
மணி, நெடுமாறன், சாலை இளந்திரைய
போன்ற இனவாத, பிழைப்புவாதத் தலை
வர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். அப்ப
அவர்கள் கூறுவதில் வியப்பில்லை
ஆனால் மார்க்சியம் - லெனினியம்
மாவோ சிந்தனையைச் சித்தாந்த வழிகாட்
யாக ஏற்றுக் கொள்வதாகக் கூறும் இனவா
- பயங்கரவாதக் குழுக்கள் என்ன செய்கி
றன?

ஒரே மொழி பேசுபவர்கள், ஒரே மத
தைச் சேர்ந்தவர்கள் போன்ற பொதுத்த
மைகளுக்காக வெவ்வேறு நாடுகள், தேசா
களில் வாழும் மக்களை ஒரே தேசிய இனம
கக் கருதுவது மிகவும் பிற்போக்கானது. இ
- மொழி - மதவெறியைத் தான் அதுதோற்
விக்கும். எனவேதான் 23 நாடுகளில் வாழு
அராபியர்கள், ஒரே மொழியைப் பேசின
லும், ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களானாலு
ஒரே இனத்தவர்கள் அல்ல; அமெரிக்கா
கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளி
வாழ்பவர்கள் ஒரே மொழி, மதத்தைச் சேர்
தவர்கள் என்றாலும் ஒரே இனத்தவர்கள்
அல்ல என்று லெனினும் ஸ்டாலினும் எதிர்
தார்கள்.

ஆகவே 'உலகம் முழுவதும் வாழும்
தமிழினம், தமிழினத் தளபதி' என்கிற கூலி
பிரச்சாரம் பிற்போக்கானது; பிரபாகரன்
போன்ற நபர்கள் இன்னொரு தமிழ் தேசிய
இனத்தின் விவகாரங்களில் தலையிட
அழைப்பு விடுப்பதாகும்; அடிப்படையைத்
தயாரிப்பதாகும். இதே பிற்போக்கான
அடிப்படையில் தான் எம்.ஜி.ஆரும் கரு
ணாநிதியும் மட்டுமல்ல; இந்திரா - ராஜீவ்
கும்பலும் ஈழத்தமிழ் மக்களின் விவகாரத்
தில் தலையிட்டு கேடு விளைவித்தனர்.

தேசிய இன (NATIONAL) பிரச்சி
னையை திராவிட இயக்கதினர் வர்ண இன
(RACIAL) ரீதியிலானதாகத் திரித்து சிதைத்த
னர். இப்போது தமிழ் இனவாத - பிழைப்பு
வாதத் தலைவர்கள் தேசிய இன (NATIO-
NAL) பிரச்சினையைத் திரித்து அனைத்து
நாட்டுத் தமிழர்களும் ஓரினம் என்கிற பிற்
போக்கு முழக்கத்தைப் பிரச்சாரம் செய்கி
றார்கள். 'தனித் தமிழ்நாடு - சுயநிர்ணய உரி
மை' கோரும் குழுக்கள் சந்தர்ப்பவாதமான
முறையில் இந்த இரண்டு தவறான, பிற்
போக்கான கருத்துக்களோடும் சமரசம்
செய்து கொள்கிறார்கள். ஒன்று ஓட்டுக் கட்
சிப் பிழைப்பு வாதத்திலோ அல்லது பிரபாக
ரன் போன்றவர்களது பாசிச பயங்கரவாதத்
திலோ தமிழர்களை மூழ்கடிக்கும் இந்தப்
போக்குகள் அனைத்துக்கும் எதிராக இந்
திய, ஈழத்தமிழர்கள் எச்சரிக்கையாய்
இருந்து முறியடிக்க வேண்டும்.

■ மாணிக்கவாசகம்